**செ. கு. எண்:062** **நாள் :02.03.2016**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 2.3.2016

16.1.2016 அன்று சென்னை, திருவல்லிக்கேனி, டாக்டர் நடேசன் சாலையைச் சேர்ந்த திரு ஜலாலுதின் கான் என்பவரின் மகன் தஸ்தகீர் பாஷா என்பவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

10.2.2016 அன்று ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் வட்டம், சல்லிமலை கிராமம், ஊர்க்காவல் படையில் காவலராகப் பணிபுரிந்த திரு சாந்தகுமார் என்பவர் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

28.2.2016 அன்று திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், ராமசாமியாபுரத்தில் கூரை இடிந்து விழுந்ததில் திருமதி லெட்சுமி மற்றும் அவருடைய மகன் முத்துமாரி உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**